18th March 1959]

SRI N. K. PALANISAMI : ஜனங்களுக்கு அதிகப்படியான சம்பா கோதுமை தேவை இருப்பதன் காரணமாக, குறிப்பிட்ட அளவுக்காவது இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கோதுமையைப் பொறுத்த மட்டில் நியாய விலைக் கடைகளில் அது வினியோகிக்கப்பட்டுவருகிறது.

SRI S. LAZAR : ரீடெயில் டிஸ்ட்ரிபூட்டர்களுக்கு இப்போது கோட்டா வழங்கப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட நகரங்களில் கொடுக்கிறபோது ஒரு சிலருக்குக் கொடுப்பதற்கு பதிலாக அதிகப்படியான ரீடெயில் டீலர்களுக்குக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எவ்வளவு கிடைக்கிறதோ அதை வைத்துக்கொண்டு தான் வினியோகிக்க வேண்டியிருக்கிறது. எந்த அளவுக்குச் சாத்தியப்படுமோ அந்த அளவுக்குச் செய்யப்பட்டு வருகிறது.

Forest survey

* 759 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Central Board of Forestry has recommended to this Government to conduct a survey of all forests in this State for obtaining full data of forest resources; and

(*b*) if so, the steps taken by the Government in the matter?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The Forest Utilization Officer collected details of timber and allied industries under the direction of the Chief Conservator of Forests.

SRI N. K. PALANISAMI : ஸார், கோயம்புத்தூரில் டிம்பர் அதிகம் கிடைப்பதால் அங்கே ஒரு பேப்பர் மில் ஏற்படுத்தலாம் என்று ஒரு ஜெர்மன் ஸ்பெஷலிஸ்ட் சிபார்சு செய்தார்களா ? அப்படியானால், இதை வைத்து அங்கே ஒரு பேப்பர் மில்லை ஏற்படுத்த சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நீலகிரியில் வாட்டில் மரம் இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு பேப்பர் மில் நடத்தலாம். அது கவனிக்கப்பட்டு வருகிறது. மற்ற டிம்பர்களெல்லாம் பேப்பருக்குத் தகுந்த டிம்பர் அல்ல. நீலகிரியில் உள்ள வாட்டில்தான் அதற்கு நல்லதாக இருக்கும். ஆகையால் அந்த வாட்டில் மரத்தை வைத்து காகித உற்பத்தி சாலை ஏற்படுத்துவது பற்றி யோசனை செய்யப்பட்டு வருகிறது.

SRI N. MARUDACHALAM : ஸார், கோயம்புத்தூரிலே வெள்ளி யங்கிரி மலைப் பகுதியில் மூங்கில் அதிகமாக இருக்கிறது. அந்தப் பகுதியில் ஏதேனும் பேப்பர் தொழிற்சாலை ஏற்படுத்துவது பற்றி அரசாங்கம் யோசனை செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மூங்கில் எங்கெங்கே கிடைக்கிறதோ அதை வைத்து காகிதத் தொழிற்சாலை நடத்துவதுபற்றியும் கவனிக்கப்பட்டுத்தான் வருகிறது.

Women welfare centres in Tirunelveli District

* 857 *Q.*—SRI T. VELUCHAMI : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) நெல்லை ஜில்லாவில் தற்சமயம் எங்கெங்கே பெண்கள் நல சென்டர்கள் உள்ளன ?

[18th March 1959

(ஆ) இந்த சென்டர்களில் நூல் நூற்பு சொல்லிக் கொடுக்கப்படுகிறதா ?

(இ) நூல் நூற்றுப் பழகிய பெண்களுக்கு அரை விலையில் அல்லது கடன் திட்டத்தில் சர்க்காக்கள் சப்ளை செய்யப்படுகிறதா ?

(ஈ) இல்லையென்றால், இனிமேலாவது சப்ளை செய்ய நடவடிக்கை எடுக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) There are three Women's Welfare Branches in the Tirunelveli district at Eral, Surandai and Chokkankudi Iruppu. In each branch, there is one slum centre and one centre for poor and middle class women. There are thus six centres in the district.

(*b*) Yes, Sir.

(*c*) This is being done in Chokkankudi Iruppu, which is in a Block area, where this concession exists.

(*d*) General instructions have been issued to all the Assistant Women's Welfare Officers to encourage spinning and to avail the concession in the matter of exchanging of hanks and for the supply of charkas by contacting the Block Development Officers and other District Officers.

MR. SPEAKER : அடுத்தபடியாக 771-ம் கேள்வி விட்டுப்போய் விட்டது. அதற்கு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கலாம்.

Cost of production of crops

* 771 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon the Minister for Home be pleased to state—

(*a*) whether the Economics and Statistical Department, Madras, undertook sample survey of the cost of production of various crops in the State in 1951–52; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No sample survey of the cost of production of various crops in this State was undertaken in 1951–52.

(*b*) Does not arise.

SRI R. SRINIVASA IYER : If a sample survey had not been taken, have the Government got particulars of the cost of cultivation in the Research Stations and Agricultural Farms which they are running?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஓரளவுக்கு இந்த மாதிரி பரிசீலனை செய்ய வேண்டுமென்று 1955-ல் கவனம் செலுத்தப் பட்டது. ஆனால் ஒன்றுக்கொன்று எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. ஒரு பண்ணைக்கும் இன்னொரு பண்ணைக்கும், ஒரு நிலத்திற்கும் இன்னொரு நிலத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது. சரியான வகையில் சர்வே செய்ய முடியவில்லை என்று கை விடப்பட்டது. ரிசர்ச் ஸ்டேஷனில் செய்வது வேறு விஷயம். ரிசர்ச் ஸ்டேஷனில் ஆராய்ச்சி செய்யப்படுகிறது. ஆராய்ச்சியின் விலைவாசியைச் சேர்த்து அதை ஒப்பிட முடியாது. எப்படியும் விஞ்ஞான ரீதியில் விவசாயச் செலவுபற்றி ஒரு பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கருதுகிறேன். மத்திய அரசாங்கத்தோடு கூட இதைப்பற்றி நான் பேசியிருக்கிறேன்.